[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 13

விரைவில் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பிற மாவட்டங்களுக்கும் பிரத்தியேகச் செய்தியாகத் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறைக் கைதி சக்தி தப்பியோடியது எப்படி என்பது குறித்து அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து முழு விவரங்களும் கிடைத்தவுடன், கைதி தப்புவதற்கு உதவியாக இருந்தவர்கள் மீதும், பணியில் கவனக்குறைவாக இருந்த சிறைத் துறை அலுவலர்கள் மீதும், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனி நடக்காவண்ணம் காத்துக்கொள்ளத் தேவையான சிறப்புத்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று சிறைத்துறையினர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வேதாரண்யம் கடைத் தெருவில் *12-4-1993* அன்று ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை, நேற்று *12-4-1993* அன்று வேதாரண்யம் நகர் கடைத்தெருவில் ஏற்பட்ட ஒரு பெரும் தீ விபத்து பற்றி திரு. பி.வி. இராஜேந்திரன், திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். அப்பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதிக் கிறேன். திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் நகரில் வரலாறு காணாத அளவுக்கு ஒரு மாபெரும் தீ விபத்து நேற்று நடந்திருக்கிறது. நேற்று மதியம் 1½ மணி அளவில் ஆரம்பித்த அந்தத் தீ, கடற்கரையோரமானதால் இப்பொழுது கோடைக்காலத்தில் அங்கு வீசுகின்ற காற்றினால் வெகு வேகமாகப் பரவி, குறைந்தது ஒரு *50* கடைகள் Hardware shop, Electrical, பாத்திரக்கடை, சாதுக்கள் மடம், டியுடோரியல் காலேஜ், வாட்ச் கம்பெனி, பூக்கடைகள், கோயில் குருக்கள்மார் வீடுகள் இப்படியெல்லாம் பரவி, சுமார் 2 கோடி ரூபாய்க்குப் பேரழிவை அங்கு ஏற்படுத்தி இருக்கிறது. இந்தத் தீயிலே எரிந்து சாம்பலானது அந்தக் கடைகள் மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட வேதாரண்யம் பகுதியில் முன்னேற்றம் காணவேண்டுமென்று முனைப்போடு இருந்த இளம் வணிகர்கள், பொதுமக்கள் இவர்களுடைய கனவுகள், நம்பிக்கை அத்தனையுமே எரிந்து சாம்பலாகிப் போயிருக்கிறது. அதனால் இந்தப் பேரழிவை எங்களது பகுதி மக்கள் தாங்கிக் கொள்கின்ற, இந்த இயற்கையின் சவாலை எதிர்த்து நிற்கின்ற அந்த மனப்பக்குவத்தை, எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்குத்தர வேண்டுமென்று நான் பிரார்த்தித்துக்

1993 ஏப்ரல் 13] *[திரு. பி.வி. இராஜேந்திரன்]*

கொள்கிறேன். அத்தோடு, இந்த அரசும், அந்த மக்களுக்குத் தன்னாலானதைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையினர் எடுத்த நடவடிக்கைகள் எங்கள் பகுதி மக்களுடைய திருப்திக்கு ஏற்றவாறே அமைந்து இருக்கின்றது. வேதாரண்யம், மன்னார்குடி, திருவாரூர் நாகப்பட்டினம் இங்கிருந்தெல்லாம் 'Fire brigades' வந்து தீயை அணைத்ததோடு மட்டுமல்ல, அங்கு முகாமிட்டு இருந்த சி.ஆர்.பி.எஃப். போலீசார் மற்றும் தனியார் துறை Chemplast நிறுவனம் இவர்களுடைய Water tank-கள் எல்லாம் சேர்ந்து அந்தத் தீயை அணைத்திருக்கின்றன. நேற்று மாலை எனக்குக் கிடைத்த தகவல், டி.ஆர்.ஓ. மற்றும் ஆர்.டி.ஓ. அங்கே முகாமிட்டு இருக்கிறார்கள் என்று. அப்பகுதி மக்களுக்கு இந்த நேரத்திலே, அவர்களுடைய புண்பட்ட மனதிற்கு அரசு இதமளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல்வருடைய நிவாரண நிதி, வணிகர் நல நிதி மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து முன்னுரிமை அடிப்படையிலான கடன்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்வார்கள். 'With Women, the heart argues and not the mind' என்று சொல்வார்கள்.

But, with our lady Chief Minister here we would like to argue with both mind and heart and we are expecting some sort of relief from the Government also. இந்த ஸ்பெஷல் மென்ஷனைத் தருவதற்கு அனுமதித்த உங்களுக்கு நன்றி தெரிவித்து நல்லதொரு நிவாரண நடவடிக்கைக்கு வேண்டுகோள் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

முற்பகல் 11.20

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி மிக வேகமாக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது என்றும், அதற்குப் பாராட்டுக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அதிலும் கடலோரப் பக்கத்தில் காற்று வேகமாக வீசுகின்றபோது, 12-4-1993 அன்று அங்கே இருக்கின்ற கோதண்டபாணி என்பவருடைய நிலக்கடலை கடையில் பற்றிய தீ சுற்றிலும் பரவி 80 கடைகளும் 8 வீடுகளும் எரிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். அவர் சொல்கிறபடி, தீ பட்டவுடன் நன்னிலம்,

திருவாரூர், திருத்துறைப்பூண்டி, எல்லா இடங்களிலே இருக்கின்ற தீயணைப்பு வண்டிகள் வேகமாக வந்து . . (குறுக்கீடு) நான் பேசுவதை வேண்டுமென்றே கெடுக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா நீங்கள்? *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி. நம்முடைய அமைச்சர் முழு விவரமும் உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் குறுக்கிட வேண்டாம். திரு. இராஜேந்திரன் அவருடைய தொகுதிக்கு ஏதாவது வாங்க வேண்டும் என்பதற்காகப் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: எல்லாம் மிக விரைவில், 90 நிமிடங்களில் இவைகள் எல்லாம் நடைபெற்று அணைக்கப் பட்டிருக்கிறது. எப்படியோ அணைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை யெல்லாம் மிக விரைவாகச் செய்தார்கள் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் கூட பாராட்டியிருக்கிறார். அவர் தெரிவித்தபடி அங்கே வருவாய்த்துறை அதிகாரிகளும் முகாமிட்டிருக் கிறார்கள். அது மட்டுமல்லாமல், காவல் துறையினர் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது இல்லாமல், அவர்களும் அங்கே பாதுகாப்புக்காக இருக்கிறார்கள். வழக்கமாக நம்முடைய அனுமதி இல்லாமல் கூட, இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டால், வருவாய்த் துறையிலே என்ன செய்ய வேண்டுமோ, அதை 8 ஊர்களுக்கு மட்டும் 500 ரூபாயும், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு வேட்டியும், சேலையும், கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக கடைகள் 80 கடைகள் திரு. இராஜேந்திரன் அவர்கள் சொன்னார் 30, 40 கடைகள் என்று -80 கடைகள் அங்கே இரையாகியிருக்கின்றன. அவர்கள் சாதாரணமாக தொழிற் செய்யக் கூடியவர்கள் என்பதும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு அதைப்பற்றி என்ன செய்வது என்பதும், மற்ற வங்கிகள் மூலமாகவும், மற்றவர்கள் மூலமாகவும் எப்படியாவது உதவி செய்வதற்கு, அரசு எப்படியாவது உதவி செய்து அவர்களை முன்னேற்றுவதற்கு, சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழு தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக்குழு மற்றும் மாநில நூலகக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.